**SHRIMATHI DEVKUNVAR NANALAL BHATT**
**VAISHNAV COLLEGE FOR WOMEN** (AUTONOMOUS)
(Affiliated to the University of Madras and Accredited with 'A+' Grade by NAAC)
Chromepet, Chennai - 600 044.


ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி தமிழ்த்துறை சுய உதவிப் பிரிவின் வளர்தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக, மாணவர்களின் கவிதை எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் 30.9.2019 அன்று கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி இர. கீதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மொழித்துறைகளின் தலைவர் முனைவர் திருமதி சு. இலட்சுமி அவர்களின் வரவேற்புரையுடன் விழா இனிதே தொடங்கியது. இதில் சாகித்ய அகாதமி மற்றும் நம்பிக்கை நட்சத்திரம் விருதாளர் கவிஞர் மனுஷி அவர்களும், எழுத்தாளர் கட்டுரையாளர் மக்கள் தொலைக்காட்சி ஆலோசகருமான கவிஞர் ஜெயபாஸ்கரன் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசைக் கல்லூரி முதல்வர் அவர்கள் வழங்கினார். கவிஞர் மனுஷி "கவிதைக்கு மொழி இன்றியமையாதது என்றும் அவரவர் உணர்வுகளை அவரவர் வெளிப்படுத்துவதுதான் சிறந்த படைப்பு" என்றும் சிறப்புரை ஆற்றினார். கவிஞர் ஜெயபாஸ்கரன் மரபுக்கவிதைகள், பாடல் புனையும் முறை அதற்கான அமைப்புகள், களங்கள் குறித்துத் தெளிவாக விளக்கினார். இந்நிகழ்ச்சியில் 17-க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். கவிஞர் மனுஷி அவர்கள், மாணவர்களுக்குக் கவி எழுதும் ஆர்வத்தையூட்டி அதனைப் படைக்கும் முறைமைகளையும் பயிற்றுவித்தார். அதனைத் தொடர்ந்து அடையாளம் என்ற தலைப்பில் அமைந்த கவிதைப் போட்டியில் அறுபது மாணவர்கள் கலந்துகொண்டனர். அதில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர் மு. விக்னேஷ்குமார் முதல் பரிசையும், காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி மாணவி ச.சினேகா இரண்டாம் பரிசையும், அம்பத்தூர் சோகா இகேதா கல்லூரி மாணவி பெ. சாந்தி மூன்றாம் பரிசையும் பெற்றனர். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திருமதி கோ. பத்மவிலாசினி அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவடைந்தது.

R. [signature]
30/9/19


Day College Office: 2265 5450, Evening College Office: 2265 4976, Fax: 2265 4976
E-mail: info.sdnbvc@gmail.com, Website: www.sdnbvc.com



# இன்றைய நிகழ்ச்சிகள்

## பொது

**சிங்கப்பூர் இந்தியா ஹேக்கத்தான்-2019:** பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பு, சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்கா, தரமணி, காலை 9.45.

**சென்னை ஐஐடி - பட்டமளிப்பு விழா:** பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பு, சென்னை ஐஐடி, காலை 11.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - உலக மொழி பெயர்ப்பு நாள்:** அமைச்சர் க.பாண்டியராஜன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவன், மொழி பெயர்ப்புத் துறை இயக்குநர் ந.அருள், எல்.ஷோபா, விவேகானந்த பாணி பங்கேற்பு, தமிழ்த்தாய் ஊடக அரங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, நண்பகல் 12.30.

**ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி - தமிழ்த்துறை - கவிதைப் பாசறை:** கவிஞர்கள் மனுஷி, ஜெயபாஸ்கரன் பங்கேற்பு, கல்லூரி சிற்றரங்கம், குரோம்பேட்டை, காலை 9.30.

**ஈஸ்வரி பொறியியல் கல்லூரி - தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம் 'க்ரெடோஸ் 2.0':** காக்னிசென்ட் தொழில்நுட்ப நிறுவன இணை இயக்குநர் சாய்குமார் விஸ்வநாதன் பங்கேற்பு, ஈஸ்வரி பொறியியல் கல்லூரி வளாகம், ராமாபுரம், காலை 9.

## ஆன்மிகம்

**நவராத்திரி திருக்கோயில் 5-ஆம் ஆண்டு நவராத்திரி கொலு கண்காட்சி திருவிழா - ஸ்ரீ சிவன் பார்வதி அலங்காரம்:** திருக்கோயில் வளாகம், 36-ஆவது தெரு, ஜி.கே.எம்.காலனி, பட்டமேடு, காலை 8.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் - திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம் - பல்லக்கு உற்சவம்:** எண்.4, கேசவப் பெருமாள் சன்னதி தெரு, மயிலாப்பூர், காலை 6.30.

**திரு அருட்பிரகாச வள்ளலார் கோயில் - மாதாந்திர சொற்பொழிவு கூட்டம்:** இரா.பாலகிருஷ்ணன் பங்கேற்பு, வள்ளலார் கோயில், வியாசர்பாடி, மாலை 5.30.